**ஹக்மன பிரதேச சபை - 2023**

---------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹக்மன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹக்மன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது ஹக்மன நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 2,678,692 தொகைக்கான கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் போலவே சபைக்குச் சொந்தமான காணிகள், கட்டிட அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,073,965 இற்கான செலவுகள் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 7,950,000 தொகைக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த பிரதேச சபையின் சூரிய பெனல் செயற்திட்டத்தின் வருட இறுதியில் உள்ளவாறு முடிவுற்ற வேலையின் பெறுமதியை இனங்கண்டு கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்களின் மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 1,017,029 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 10,240,256 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | பதிவேடுகள் சரி செய்யப்பட்டு வருகின்றன என. | குறிப்பிட்ட மீதிகளில் காணப்படும் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 37,408,416 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 3,828,932 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்க ப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்க ப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,883,841 | 2,177,838 | 1,638,999 | 3,580,203 | 1,738,714 | 4,448,370 | 4,381,620 | 3,041,364 |
| ii. | வாடகை | 13,008,240 | 11,513,149 | 12,584,269 | 501,650 | 14,130,040 | 4,866,449 | 3,486,129 | 1,572,770 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,121,000 | 805,164 | 777,164 | 28,000 | 1,090,650 | 622,366 | 743,766 | - |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 12,813,000 | 17,029,070 | 17,426,697 | 17,280 | 15,043,100 | 9,761,650 | 9,420,711 | 414,907 |
| | | 28,826,081 | 31,525,221 | 32,427,129 | 4,127,133 | 32,002,504 | 19,698,835 | 18,032,226 | 5,029,041 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 758 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 1,314,695 தொகை மற்றும் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 178 கடையறைகளில் 40 இற்குரிய ரூபா 501,650 இற்கான வருமானமொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2024 மார்ச் 31 திகதி அளவில் 129 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 178,250 இற்கான நிலுவைத் தொகையொன்று அறவிடப்பட்டிருந்ததெனவும், மற்றும் 2024 ஏப்ரல் 04 திகதி அளவில் 33 கடையறைகளிலிருந்து ரூபா 292,900 தொகை அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1992 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் அடிப்படையில் 2268 வீதவரி அலகுகளில் இருந்து வீதவரி அறவிடப்பட்டிருந்ததுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(2) இற்கு இணங்க புதிய வீதவரி ஆதனங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய வீதவரி ஆதனங்களை இனங்கண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு வரைபுகள் வரைந்த பின்னர் 2024 பெப்ரவரி 26 திகதி அங்கீகாரத்திற்காக மாத்தறை உள்ளூராட்சி உதவியாணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2016 ஆண்டிலும் வீதவரி பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிலும் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்காக 2023 ஜூலை 28 திகதி ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருந்தது எனவும், பெறுமதி மதிப்பீட்டுக்கு தேவையான ஆவணங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2023 ஆகஸ்ட் 10 திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | பஸ் தரிப்பு நிலையத்தில் 08 இலக்க கடையறையின் வாடகை உரிமையாளருடன் உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருக்காமையால் 2019 ஆண்டு முதல் அவர் கடை வாடகை செலுத்துவதற்கு புறக்கணித்திருந்த போதிலும் அந்த நிலுவையை அறவீடு செய்வதற்காக சட்டச் செயற்பாடுகள் எடுப்பதற்கு முடியாமல் இருந்தது. | வாடகையாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமை மற்றும் வாடகையாளரை கண்டிறிய முடியாமை ஆகிய காரணங்களினால் சட்டச் செயற்பாடுகள் எடுக்க முடியாமல் உள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2010 திசெம்பர் 27 திகதிய தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/பபாகோ/2010/01 கொண்ட சுற்றறிக்கையின் 05 பந்திக்கு இணங்க சபைக்கு சொந்தமான பொது வர்த்தக கட்டிடத் தொகுதிகள் மற்றும் புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் 03 கடையறைகளின் உடன்படிக்கை நாளதுரை ஆக்கப்பட்டிருக்காததுடன், அந்த சுற்றறிக்கையின் 11 பந்திக்கு முரணாக சபைக்கு சொந்தமான பொதுச் சந்தை மற்றும் பஸ் தரிப்பு நிலைய வர்த்தக கட்டிடத் தொகுதியின் 02 கடையறைகள் ஏனைய தரப்பினருக்கு துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஒரு கட்டிடத் தொகுதியில் 02 கடையறைகளில் வாடகையாளர்கள் வெளிநாடு சென்றிருந்தமை மற்றும் அடுத்த கடையறையில் வாடகையாளர் இறந்திருந்தமையால் அவரின் மனைவிக்கு சாட்டப்பட்டு அவளுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் மற்றும் அடுத்த கடையறை வேறு ஒருவரை ஈடுபடுத்தி வியாபாரம் செய்யப்படுவதுடன் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஊ) | பஸ் தரிப்பு நிலைய வர்த்தக கட்டிடத் தொகுதியில் 07 கடையறைகள் எதுவித தேவைக்கும் பயன்படாது மூடப்பட்டிருந்ததுடன், அவற்றில் 05 கடையறைகளில் இருந்து ரூபா 159,500 இற்கான நிலுவை வாடகைத் தொகையொன்று மீளாய்வாண்டு இறுதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்தது. | 2024 ஏப்ரல் 04 திகதி அளவில் 05 கடை அறைகளில் இருந்து ரூபா 33,000 தொகை அறவீடப்பட்டுள்ளது எனவும், ரூபா 120,500 தொகை நிலுவையாக காணப்படும் கடையறை தற்போது சபைக்கு உரித்தாக்கியுள்ளது எனவும், நாட்டின் பொருளாதார நிலைமை | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சீரற்று காணப்படுவதனால் இந்த கடையறைகளில் வியாபார அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என இந்த வாடகையாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் என. | |
| (எ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 470,419 தொகை முத்திரைக் கட்டணம் என ரூபா 7,377,158 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் சிட்டையிடப்பட்டிருந்த ரூபா 300,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டண சிட்டையிடல் ரூபா 4,900,000 தொகை தவிர மீதி ரூபா 170,419 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் முழுமையாகவும், மீதி ரூபா 2,477,158 இற்கான தொகை மீது முத்திரைக் கட்டணத் தொகையில் ரூபா 2,476,133 தொகையும் தற்போது அறவிடப்பட்டுள்து என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 பிரிவிற்கு இணங்க பின்வரும் விடயங்களுகாக துணைச் சட்டங்கள் சட்டவாக்கப்பட்டிருக்கவில்லை.<br>i. ஹக்மன டெனி அபேவிக்ரம விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு கொடுத்தல்<br>ii. பிரதேச சபை அதிகார பிரதேசத்தை சேர்ந்த நகரம் | ஹக்மன டெனி அபேவிக்ரம விளையாட்டு மைதானம் மற்றும் நகர மண்டபம் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக ஆளுனரின் அங்கீகாரத்திற்கும் உள்ளுராட்சி ஆணையாளரின் | துணைச் சட்டங்கள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சாராத எல்லையுள் கட்டிட வரைபுகள் அங்கீகரித்தல் | அங்கீகாரத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| iii. நகர மண்டபத்தை வாடகைக்கு கொடுத்தல் | | |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1995 ஒக்தோபர் 16 திகதி 136 பாதைகளை வர்த்தமானியில் பிரசுரித்த பின்னர் சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் பாதைகளை வர்த்தமானியில் மூலம் வெளியிட்டிருக்கவில்லை. | தற்போது சபைக்குச் சொந்தமான அனைத்து பாதைகளும் GPS Essential மற்றும் Google earth மற்றும் மென்பொருட்களை பயன்படுத்தி நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளுராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்புத் தொகை என செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,103,914 இற்கான மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதி தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் தவணைகளாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக பாதைகள், வடிகால் முறைமைகள் நீர் மற்றும் மின்சார வசதிகளை அபிவிருத்தி செய்யாமல் சபையில் அதிகார பிரதேசத்தில் நகர்சார் எல்லையைச் சேர்ந்த ஹக்மன, திகன, பெலவத்த எனப்படும் காணி 06 துண்டுகளாக துணைப்பகிர்வு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், சபை அதிகார | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தமையால் 2024 பெப்ரவரி 08 திகதிய திட்டக் குழு தீர்மான இலக்கம் 2024/11 இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதெனவும் மற்றம் உத்தயோகத்தர்களினால் சபையின் அதிகார பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்படும் காணி | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட ரீதியற்ற துணைப் பகிர்வுகளை ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே இனங்கண்டு அவற்றை முறைப்படுத்துவற்கு அல்லது அவற்றினை நிறுத்துவற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முறையான செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | துணைப் பகுதிகளை இனங்கண்டு அறிவித்த பினன்ர் அது தொடர்பாக நடவடிககைகள் எடுக்கப்படும் என. | |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் வர்த்தமானி அறிவித்தல் பகுதி II இன் பிரிவு 23 ஏற்பாடுகளுக்கு புறம்பாக அலுத்வத்த எனப்படும் துண்டுகளாக பகிரப்பட்ட காணியில் இருந்து பொது அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தரைத் துண்டு பகிரப்பட்ட காணியின் மேற்பகுதியில் கடின இறக்கமுள்ள பகுதியொன்றிலிருந்தும் ஜம்புகஸ்கொரடுவ காணியின் சதுப்பு நிலப் பகுதியொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட இரண்டு காணிகளினதும் எல்லை வேலிகள் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. எதிர் காலத்தில் ஏல விற்பனவுக் காணிகளில் இருந்து பொது அலுவல்களுக்காக பயன்படுத்தக்கூடிய இடங்களில் இருந்து துண்டுகளை ஒதுக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொது அலுவல்களுக்கு பயன்படுத்துவதற்கு பொருத்தமான காணித்துண்டுகளை ஒதுக்கிக்கொள்ள வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,782,650 தொகைக்கான 09 கொள்வனவுகள் தொடர்பாக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 178(7)(1) மற்றும் 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1:4:1 மற்றும் 5:2:1 ஆகிய ஏற்பாடுகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது. | சீல் வைக்கப்பட்ட கூறுவிலை கடிதங்கள் டென்டர் பெட்டியில் போடப்பட்டிருக்காத போதிலும் அவற்றில் அனேகமானவை பதிவுத் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டிருந்ததெனவும், தற்போது கூறுவிலைகள் பதிவுத் தபால் மூலம் மாத்திரம் சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டதெனவும், கிடைக்கக்கூடிய கூறுவிலைகளை டென்டர் பெட்டியில் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதி மற்றும் நிருவாக விதி மற்றும் பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.5 (அ) இற்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றிற்கு சமர்ப்பிக்காமல் ரூபா 458,000 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு 02 | 2023 ஆண்டின் போது விலைக்குழு நடைபெறும் குறிப்பிட்ட திகதியொன்று மற்றும் நேரமொன்று தீர்மானித்திருக்காமையினால் பெறுகைக் கடிதங்களில் அது | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | தொடர்பாக குறிப்பிடுவதற்கு முடியாமல் போனது எனவும், தற்போது குறிப்பிட்ட நிரந்தர திகதியொன்று மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டு விலைக்குழு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆண்டில் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 12,989,775 தொகை செலவிடப்பட்டு ஹக்மன தகனகூடம் மறுசீரமைக்கப்பட்டிருந்ததுடன், அங்கு நிர்மாண வேலைகளுக்காக வரைபுகள் தயாரிக்கப்பட்டிருக்காமை, நிறைவேற்றப்பட்ட விடயங்களை ஒழுங்கு வரிசைப்படி இனங்கண்டு மதிப்பீடு செய்திருக்காமை, மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 235,622 இற்கான வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்படாமை, நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக ரூபா 72,736 தொகை ஒப்பந்தக்காரருக்காக மிகையாக செலுத்துதல், பொறுத்தப்பட்டிருந்த அடுப்பங்கரை நீர் சிங்க் குறிப்பிட்ட அளவில் காணப்படாமையினால் ரூபா 5,104 தொகை மிகையாக செலுத்துதல் மற்றும் கட்டிடத்தின் உட்பகுதி மற்றும் சுவர்களில் வர்ணம் பூசுவது தொடர்பாக அளவையெடுத்தல் வெவ்வேறாக பெற்றுக்கொண்டு தென்மாகாண பொறியியலாளர் அலுவலகத்தினால் 2020 ஆண்டில் முதல் அரையாண்டிற்கான PT – 21 அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 401 இற்கான ரேட் பயன்படுத்தப்படாமல் ஒப்பந்தக்காரருக்கு சதுரமீற்றருக்கு ரூபா 41 வீதம் மிகையாக செலுத்துதல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | அந்த நிர்மாண வேலையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக தடுத்து வைத்தல் பணம் விடுவிக்கப்படவில்லை எனவும், அந்தக் குறைபாடுகளை சரி செய்த பின்னர் தடுத்து வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனைத்து வேலைகளும் அடங்கக் கூடியவாறு சரியான ரேட்களை பயன்படுத்தி மதிப்பீடுகள் தயாரித்து உரிய முறையில் நிறைவேற்றிய வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) ஹக்மன தகன கூடத்தின் சூளையை மறுசீரமைப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 468,470 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், விபரக் குறிப்புக்கள் தயாரித்திருக்காமை, | தடுத்து வைத்தல் பணம் விடுவிக்கபடாமையால் குறைபாடுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ரேட்களின் காரணமாக | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறைசாரா விதமாக பெறுகைகள் நிறைவேற்றப்படல் மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2:8:5 (அ) இணங்க மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படாமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | அதிகரிக்கப்பட்டிருந்த தொகையினை குறைத்துக்கொண்ட பின்னர் மீதித் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலக உதவியாளர், வேலை/ வெளிக்கள தொழிலாளர் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டு சபையில் கடமையாற்றும் ஆரம்ப தரத்தை சேர்ந்த 10 ஊழியர்களுக்கு அவர்களின் நிரந்தர பதவிக்குரிய கடமைகள் அல்லாத கடமைகள் சட்டப்பட்டிருந்தது. | 02 அலுவலக உதவியாளர்கள் போதியளவாக காணப்படாமை, அவர்கள் பெண்களாக இருந்தமையால் வேலை வெளிக்களத் தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் அலுவலக உதவியாளர் பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டப்பட்டதெனவும், இரண்டு காவலாளிகளில் ஒருவருக்கு சேவையை விட்டு விலகும் கட்டளை வெளியிடப்பட்டிருந்ததால் அதற்காக வேலை வெளிக்கள தொழிலாளர்களை ஈடுபடுத்தியிருந்ததெனவும், சாரதி அனுமதிப்பத்திரம் காணப்படும் சுகாதார தொழிலாளர் சாரதியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளதெனவும். 08 பல் கரும அபிவிருத்தி உதவியாளர்கள் வெளிக்கள கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதெனவும், மக்கள் நலனோம்பு, சுகாதார அலுவல்கள் மற்றும் பாதை பராமரிப்பு அலுவல்கள் தடையின்றி நடாத்திச் செல்வதவற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் செல்லும் அறிவித்தல் வழங்கியிருந்த ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 224,250 இற்கான இடர் கடன் மீதி மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பிணையாளருக்கு பிரதியொன்றுடன் கடனாளிக்கு கடிதம் அனுப்பிய பின்னர் 2024 ஜனவரி 16 திகதி கடனாளியினால் ரூபா 5,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |